
Price 50 Ps. only

# நற்கருணை வீரன்

இதழ் 54 மார்ச்சு 2007 எண் 3



எலிகளை ஒழிக்க எளிதான வழி

பரமார்த்த குருவும் சீடர்களும் ஊர் ஊராகச் சென்று கொண்டிருந்தார்கள். ஊர் மக்களும் அவர்கள் மேல் இரக்கப்பட்டு அவர்களுக்கு உணவு கொடுத்து ஆதரித்தார்கள். மக்கள் தரும் உணவை மகிழ்ச்சியோடு சாப்பிட்டு, சுகமாக வாழ்ந்துவந்தார்கள். 'சோறு கண்ட இடம் சொர்க்கம்' என்பது போல் இருந்துவந்த குருவும் சீடர்களும் வீட்டைவிட்டு வந்து பல நாட்கள் ஆகிவிட்டது.

இந்த நிலையில் குருவுக்குத் திடீரென வீட்டைப் பற்றிய நினைவு வந்தது. இத்தனை நாட்கள் பயன்படுத்தாததால் வீடு எப்படி இருக்கிறதோ என்று கவலைப் பட்டார். அவரின் கவலை தோய்ந்த முகத்தைக் கண்ட சீடர்களுக்கு வருத்தம் ஏற்பட்டது. "குருவே, ஏன் இப்படிக் கவலையோடு இருக்கிறீர்கள். நாங்கள் இருக்கும்போது உங்களுக்கு என்ன குறை?" என்று அவரிடம் அன்போடு கூறினார்கள். அதற்கு அவர், "சீடர்களே நாம் வீட்டை விட்டு வந்து பல நாட்கள் ஆகிறது. வீடு எந்த நிலையில் இருக்கிறதோ தெரியவில்லை. அந்த ஊரில் எலித் தொல்லை அதிகமாக இருக்கும். மேலும் தேள், கரப்பான் பூச்சி போன்றவை நிறைய அலையும்" என்றார். அதைக் கேட்ட சீடர்கள் "குருவே, கவலைப்படாதீர்கள், நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்களோ அவ்வாறே செய்கிறோம்" என்று கூறினர். "நீங்கள் ஊருக்குச் சென்று வீட்டைத் திறந்து பார்த்து அங்கு எலிகள், பெருச்சாளிகள் இருந்தால் எல்லா வற்றையும் கொன்றுவிடுங்கள்" என்று கூறினார்.

உடனே சீடர்கள் ஊருக்குப் பயணமானார்கள். அங்கு சென்று வீட்டைத் திறந்து பார்த்த அவர்கள் அதிர்ச்சியில் அலறினார்கள். ஆம், வீடு முழுவதும் எலிகள், பெருச்சாளிகள்! எங்கு பார்த்தாலும் அவை வளைகள் தோண்டி அங்குமிங்கும் மண்ணைக் குவித்திருந்தன. சீடர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சில எலிகள் அவர்கள் மேல் தாவி விழுந்தன. உடனே கதவைப் பூட்டிவிட்டு வெளியே வந்து இத்தனை எலிகளையும் எப்படிக் கொல்வதென்று சிந்திக்கத் தொடங்கினார்கள்.

நீண்ட சிந்தனைக்குப் பிறகு "இந்த வீட்டிற்கு நெருப்பு வைத்தால் எல்லா எலிகளும் செத்துவிடும் இல்லையா?" என்று மூடன் ஓர் ஒப்பற்ற கருத்தைத் தெரிவித்தான். அனைவருக்கும் அவன் சொன்ன கருத்து மிகவும் பிடித்திருந்தது. அவ்வளவுதான்! அந்த ஐந்து பேரும் தீப்பந்தங்களைத் தயார் செய்தார்கள். சிறிது நேரத்தில் வீடு பற்றி எரிய ஆரம்பித்தது. புகையைப் பார்த்த எலிகள் எல்லாம் வீட்டிலிருந்து தப்பித்து வெளியே ஓடிவிட்டன. முடிவில் அழிவுற்றது எலிகள் இல்லை. குருவின் வீடுதான்!

மாணவச் செல்வங்களே! எலிகளை ஒழிக்கச் சீடர்கள் கண்ட எளிதான வழியைப் பார்த்தீர்களா! இந்தக் கதை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? இதிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன? இந்தக் கதையைப் பற்றி உங்கள் நண்பர்களோடு கலந்துரையாடி உங்கள் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பாருங்களேன். இதையே ஒரு குட்டி நாடகமாகவும் எழுதி நடிக்கலாம் – இல்லையா?

## தேர்வு எழுத சில வழிமுறைகள்



மாணவச் செல்வங்களே! தேர்வு நெருங்க நெருங்க படித்ததெல்லாம் மறந்து விட்டது போன்ற பயம் வரலாம். இன்னும் நிறையப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படலாம். தைரியமாக இருங்கள். நீங்கள் படித்தவை எதுவும் வீண் போகாது. தேர்வை ஒரு வேதனையாக நினைக்காமல் அதை உங்கள் உயர்வுக்கு ஒரு சாதனையாக எண்ணுங்கள்.


தேர்வுக்குச் செல்லும் முன் எழுதுவதற்குத் தேவையான பேனா, பென்சில் போன்றவற்றை முன்கூட்டியே யோசித்துப் பார்த்து எடுத்துச் செல்லுங்கள். குறிப்பிட்ட நேரத்திற்குப் பத்து நிமிடம் முன்பே தேர்வு அறைக்குச் செல்லுங்கள். சைக்கிளில் செல்பவர்கள் சைக்கிள் நல்ல நிலையில் இருக்கிறதா என்று முதல் நாளே பார்த்துக் கொள்ளுங்கள்.

தேர்வு அறையில் அமர்ந்திருக்கும்போது, சிந்தனையைச் சிதறவிடாமல் கடவுளை நினைத்து அமைதியாக அவருடைய ஆசீரை வேண்டுங்கள். கேள்வித்தாள் கிடைத்தவுடன் விறுவிறு என்று எழுதத் தொடங்காமல், நிதானத்துடன் அதை ஒருமுறை முழுமையாக வாசியுங்கள். வாசித்த பின் முதன் முதலில் நன்கு தெரிந்த கேள்விகளுக்கு, கேட்ட அளவிற்கு விடை எழுதுங்கள். ஒவ்வொரு கேள்விக்கும் தேவையான நேரத்தை ஒதுங்குங்கள். பதில் நினைவுக்கு வராதபோது குழப்பமடையாமல், அதற்கு இடத்தை ஒதுக்கிவிட்டு, தெரிந்ததை தொடர்ந்து எழுதுங்கள். மறந்த பதில் நினைவுக்கு வரும்போது அதை அதற்குரிய இடத்தில் எழுதலாம். தேர்வை பத்து நிமிடத்திற்கு முன்பே முடித்துவிட்டு, நீங்கள் எழுதிய விடைத் தாளை ஒருமுறை நிதானமாக வாசியுங்கள். தேர்வு எழுதும்போது காப்பியடித்தல், பிறருக்கு சொல்லிக் கொடுத்தல் போன்ற தவறுகள் எதையும் செய்யக்கூடாது. நீங்கள் தேர்வு எழுதும் போது, கடவுளுக்கு எல்லா விடையும் தெரியும் என்னும் உண்மையை மறந்துவிடாதீர்கள்.

## எனக்காக அழ வேண்டாம்

ஒருமுறை, இயேசு நடந்து செல்வதைப் பார்த்த திருமுழுக்கு யோவான், "இதோ உலகின் பாவங்களைச் சுமக்கும் இறைவனின் செம்மறி" (யோவா. 1:29) என்று கூறினார். யூதர்கள் தாங்கள் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக செம்மறியாடுகளைத் தேவாலயத்தில் பலியிட்டார்கள். அதேபோல ஓர் ஆட்டுக்குட்டியின் தலைமீது பாவங்களைச் சுமத்தி, அதை ஒரு பாலை நிலத்திற்கு ஒட்டிச் சென்று அங்கேயே விட்டுவிடுவார்கள். (லேவி. 16:20–22) இவ்வாறு மனிதர்கள் செய்த பாவத்திற்காக ஆடுகள் பலியாகின.

அதேபோல பாவமேதும் அறியாத புனித வடிவமான இயேசு, பாவத்தின் சின்னமான



சிலுவையைச் சுமந்து கொண்டு பலியாவதற்குச் சென்று கொண்டிருந்தார். அவரைப் பின் தொடர்ந்த மக்கள் கூட்டத்திற்குள் நல்ல உள்ளம் கொண்ட சில பெண்கள் இருந்தனர். இவர்கள் இயேசுவின் வேதனையைப் பார்த்து கண்ணீர் சிந்தினார்கள்.

அவர்களைக் கண்ட இயேசுவின் இதயம் கருணையின்பால் நிறைந்து பொங்கியது. அவர்களின் அகக் கண்களைத் திறக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, "எனக்காக அழ வேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். பச்சை மரத்திற்கே இப்படிச் செய்கிறார்கள் என்றால் பட்ட மரத்திற்கு என்னதான் செய்யமாட்டார்கள்?" என்றார். (லூக். 23:27–31).

மண்ணுக்குள் புதைத்த விதை சிதைவுறுகிறது. பின் தளிர்த்து மரமாக, உயர் வாழ்வு பெறுகிறது. ஆனால் மண்ணுக்குள் விழுந்த விதை அழுகிப் போனால் அது எதற்குப் பயன்படும்? கிறிஸ்து சிதைவுற்ற விதை. நாமோ அழுகிய விதைகள். கிறிஸ்துவுக்காக அழுவது தேவையற்றது. பாவத்தில் வீழ்ந்து அழிவின் பிடியில் சிக்கியிருக்கும் நாம்தான் நம்மை நினைத்து அழவேண்டும். மனம் மாறி நமது வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

(தொடரும்)

# தங்கத் திறவுகோல் (2)

## காசுகள் படுக்கை மீது விழுந்தன



ஏமாற்றத்தோடும் வருத்தத்தோடும் வீடு நோக்கி வந்துகொண்டிருந்த விமலா, வழியில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்த மனிதரைப் பார்த்தாள். அந்தப் பிச்சைக்காரர் விமலாவிடம் கையேந்தி, "அம்மா... தாயே... பிச்சை போடும்மா..." என்று பணிவோடு கேட்டார். விமலாவுக்கு உடனே பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. "வீட்டுக்கு ஓடிச் சென்று நான் சேர்த்து வைத்திருக்கும் எல்லாக் காசுகளையும் இந்தப் பிச்சைக்காரருக்கு கொடுப்பேன். இந்த நல்ல செயலுக்கு பொம்மை மாளிகையில் நுழைய எனகு அனுமதி கிடைக்கும்."

பொம்மை மாளிகைக்குள் எப்படியாவது நுழைந்துவிடவேண்டும் என்னும் ஆசை விமலாவின் நெஞ்சத்தை நிறைத்தது. உடனே வேக வேகமாக வீட்டிற்கு ஓடிச் சென்றாள். தான் காசுகள் சேர்த்து வைத்திருந்த டப்பாவைத் திறந்து படுக்கை மீது கொட்டினாள். ஏராளமான புத்தம்புது காசுகள் பளபளத்தன. அவற்றை கொண்டுவந்து அந்தப் பிச்சைக் காரரிடம் கொடுத்தாள். அந்த மனிதனின் கண்கள் நன்றி உணர்வால் நிறைந்தன. "நீ நல்லா இருக்கணும்மா. நீ நினைத்ததெல்லாம் நடக்கணும்" என்று அவர் விமலாவை வாழ்த்தினார்.

அந்த வாழ்த்தைக் கேட்டு மகிழ்ச்சியோடு பொம்மை மாளிகையை நோக்கி விரைந்தாள். அங்கு நின்று கொண்டிருந்த பெரியவரிடம் தான் அந்தப் பிச்சைக்காரருக்குச் செய்த உதவியைப் பற்றிப் பெருமையாகக் கூறி "இப்போதாவது நான் பொம்மை மாளிகைக்குள் நுழையலாமா?" என்று உற்சாகத்தோடு விமலா கேட்டாள். அந்தப் பெரியவர் சிறிது நேரம் அமைதியாக அவளைப் பார்த்து புன்னகை புரிந்தார். பின், "இதுவும் போதாது கண்ணா. இன்னும் நீ நிபந்தனைகளை முழுவதும் நிறைவேற்ற வில்லை" என்று கூறினார். விமலாவுக்கு மறுபடியும் ஏமாற்றம். சிறிது நேரம் செய்வ தறியாது பொம்மை மாளிகையின் கதவையே பார்த்துக் கொண்டு நின்றாள்.



*(தொடரும்)*

## புனிதர் மரிய வியான்னி



97 தந்தை நாள் முழுவதும் தன் இல்லத்தில் இருப்பதில்லை. பங்கு மக்களைச் சந்திக்கச் செல்வது அவருக்கு மிகவும் பிடிக்கும். முன்னறிவிப்பின்றி மதிய உணவு வேளையில் அவர்கள் வீடுகளுக்குச் செல்வார். அவர்களோடு சேர்ந்து ஓர் உருளைக் கிழங்கை உண்டு சிறிதளவு திராட்சை இரசமும் பருகுவார். அவர்களுடைய இன்ப துன்பங்களையும் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் கேட்டு நற்செய்தி ஒளியில் அறிவுரை கூறுவார்.


98 சிறிது சிறிதாக ஆர்சின் வாழ்க்கை முறை மாறியது. பழைய முட்டையைப் புது முட்டை என்று ஏமாற்றுவது, எடைகளில் ஏமாற்றுவது முதலியவற்றை நிறுத்தி நேர்மையாக நடக்க முற்பட்டனர். திருடுவதையும் மக்கள் அறவே வெறுத்தனர். எந்த அளவுக்கு எனில் ஒரு கடையில் பழத்தைத் திருடியதற்காக பெனுவா திருவ் என்னும் சிறுவனை கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் மன்னிப்புக் கேட்க வைத்தாள் அவனுடைய தாய்.



**99** திருவழிபாட்டு நிகழ்வுகளில் மிகுந்த கவனம் செலுத்தினார் தந்தை. பாடகர் குழு ஒன்றை ஏற்படுத்திச் சிறுவர்களுக்கு சனிக் கிழமைகளில் பயிற்சி தந்தார். திருப்பலியைப் பற்றி எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் சிறுவர்களுக்கு வகுப்புகள் எடுப்பார். அதனால் சிறுவர்கள் மிகவும் பக்தியுடன் திருப்பலியில் பங்கேற்றனர். அதைக் கண்ட ஆயர் ஆர்சின் சிறுவர்களை மறைமாவட்டத்திற்கு முன்மாதிரி என்று புகழ்ந்துரைத்தார்.




**100** ஒரு திருநாள் அவருக்கு மிகவும் பிடித்த திருநாள். அது நற்கருணைப் பவனி. வழியெல்லாம் மலர்களாலும், விளக்குகளாலும் தோரணங்களாலும் அணி செய்து, சாகும் வரை ஒவ்வோர் ஆண்டும் தாமே கதிர்ப் பாத்திரத்தைச் சுமந்து செல்வார். இறுதி ஆண்டில் மிகவும் பிணி உற்றிருந்த போதும் இரண்டு மணி நேரம் அதைச் சுமந்து சென்றார். சிலர் அவரிடம், "சுவாமி இதைச் சுமப்பது கடினமாயிற்றே!" என்ற போது, "நான் சுமப்பவர் என்னைச் சுமக்கிறார்" என்றார் வியான்னி.



(தொடரும்)

| | | |
|---|---|---|
| RNI 1316 / 57 | 26th of every month<br>Pandianagar S.O. | **REGD. TN/SR/DDL-225/2006-2008**<br>Licensed to Post without Prepayment / TN/WPP - 62/SR/2006 - 2008 |

**Edited & Published by Rev.Fr.M.S.Savariraj, S.J., and Printed at St.Mary's Press, Beschi College, P.B.No.90, Dindigul - 624 001, TamilNadu. ✆ (0451) 2432188**



## எது உண்மையான வெற்றி?

கவிதாவும் கமலாவும் ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கவிதா எல்லாப் பாடங்களிலும் முதல் நிலையில் இருந்து வருகிறாள். ஆனால் கணக்கில் முதல்நிலை பெறுவது கமலாதான். இதனால் கமலாமீது கவிதாவுக்குப் பொறாமையாக இருந்தது. வரவிருக்கும் ஆண்டுத்தேர்வில் கணக்கிலும் முதல் இடம் பெற வேண்டும் என்ற ஆசையோடு கடினமாக உழைத்து வந்தாள். இந்த நேரத்தில் கமலா உடல் நலமில்லாமல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். இது கவிதாவுக்கு மகிழ்ச்சி தந்தது. தான் இந்த முறை கணக்கிலும் முதலிடம் பெறுவது உறுதி என அவள் நினைத்தாள். பத்து நாட்களுக்குப் பின் பள்ளிக்கு வந்த கமலாவுக்கு எல்லாப் பாடங்களுமே புதிதாக இருந்தன. க்மலாவை கவிதா கண்டுகொள்ளவே இல்லை. ஆனால் மாலை வீடு திரும்பிய கவிதாவின் மனதில் நிம்மதி இல்லை. எவ்வளவுதான் படிக்க முயன்றும் அவளுடைய மனது கமலாவின் இயலாமையை நினைத்து வருந்தியது. தான் செய்த தவறை உணர்ந்தாள்.

உடனே கமலாவின் வீட்டிற்கு சென்ற கவிதா "கமலா நீ பள்ளிக்கு வராத நாட்களில் நடத்திய பாடங்களை உனக்குச் சொல்லித்தர வந்தேன். நீதான் இந்த முறையும் கணக்கில் முதல் மதிப்பெண் பெற வேண்டும்" என்றாள். வீடுதிரும்பிய கவிதாவின் உள்ளம் இனம்புரியா மகிழ்ச்சியால் பொங்கி வழிந்தது. இத்தகைய மகிழ்ச்சியை அவள் தேர்வில் முதலிடம் பெற்றபோதுகூட அனுபவிக்கவில்லை.

கவிதா தன்னலத்தை வென்றாள். இந்த வெற்றி தேர்வில் அவளுக்குக் கிடைக்கும் வெற்றியைவிட எவ்வளவோ உயர்ந்தது, ஒப்பற்றது. பொறாமை உணர்வையும், தன்னலத்தையும் வென்று, பிறருக்கு அன்போடு உதவும்போது நீங்கள் இறையரசின் வீரர்களாகிறீர்கள்.